குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம்

திண்டுக்கல்

STC.No: 79/2025 , நாள் – 08.06.2026.

எதிரி தரப்பு சாட்சி 1 இன் சாட்சியம்

முதல் விசாரணை

பெயர் – சுப்புலெட்சுமி

தந்தை பெயர் – முத்துச்சாமி

முகவரி – திருமலைக்கேணி நகர், திண்டுக்கல்.

வயது – 63

தொழில் – இல்லத்தரசி (ஓய்வு)

**புகார்தாரர் ஆஜரில்லை. 279 BNSS Petition filed and allowed.**

**சத்தியப்பிரமாணத்தின் மூலம் முதல் விசாரணை**

**எதிரி தரப்பு சாட்சியம்**

எனக்கு புகார்தாரர் ராஜா சிதம்பரம் என்பவரை தெரியாது. நான் அவரிடம் காசோலை கொடுக்கவில்லை. எனது மகன் ஸ்ரீராம். 13.07.2024 ம் தேதி அன்று இறந்துவிட்டார். எனது மகன் இறப்பதற்கு முன்பு எனது பெயரில் சுப்பு லெட்சுமி கான்ட்ராக்டர் என தொழில் செய்து வந்தார். அதில் நான் எந்த வேலையும் செய்யவில்லை. அந்த நிறுவனத்தை வைத்து சாலை அமைக்கும் பணி செய்து வந்தார். எனது மகன் தான் நிறுவனத்தின் நிர்வாகத்தை பார்த்து வந்தார். அவர் வசம் தான் காசோலைகள் இருந்தது. இந்த வழக்கு காசோலையும் அவர்தான் புகார்தாரருக்கு கொடுத்து உள்ளார். புகார்தாரருக்கும் எனக்கும் எந்த வரவு செலவும் இல்லை . நான் அவரை பார்த்தது இல்லை. இந்த வழக்கு எவ்வளவு தொகைக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.அது எனது கணவருக்கு

தான் தெரியும்.23.04.2023 ம் தேதியில் இருந்து நான் பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டேன்.மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன்.அதன் பிறகு வீட்டில் இருந்து வருகிறேன். நான் சிகிச்சையில் இருந்தற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். (**24.04.2023 ம் தேதியிட்ட Scan report எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 05.05.2023 ம் தேதியிட்ட Discharge summary எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.08.2023 முதல் 16.09.2023 ம் வரையிலான மேல்சிகிச்சைக்கான ஆவணம் எ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 12.05.2025 ம் தேதியிட்ட மருத்துவ சான்றிதழ் எ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) இந்த வழக்கை தவிர புகார்தாரர் ஒரு கோடி கேட்டு சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் வெற்று காசோலையாக நிரப்பாமல் கையொப்பம் போடாமல் வீட்டில் இருந்த சோ கேசில் வைத்திருந்தேன்.

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

சுப்புலெட்சுமி கான்ட்ராக்டர் நிறுவனத்தின் உரிமையாளர் நான் என்றாலும் அதன் லைசன்ஸ் எனது பெயரில் உள்ளது என்றாலும் சரிதான். அதை ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்க வேண்டும் என்றால் சரிதான். சுப்புலெட்சுமி கான்ட்ராக்டர் நிறுவனம் இன்று வரை எனது பெயரில் உள்ளது என்றால் சரிதான். ராஜா சிதம்பரம் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதை பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். 30.10.2024 ம் அன்று பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் எனது கணவர் தான் அனுப்பினார். அந்த பதில் அறிவிப்பில் உள்ள விபரம் எனக்கு தெரியாது. மேற்படி பதில் அறிவிப்பில் நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த

மருத்துவ ஆவணங்கள் கடன் வாங்கிய தேதி மற்றும் காசோலை கொடுத்த தேதியிலும் இல்லை என்றால் தெரியவில்லை. எனக்கு இடது கை வரவில்லை என்றாலும் வலது கை நன்றாக உள்ளது என்றாலும் சரிதான். தற்போது வரை நிறுவன நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரரை தெரியாது என வழக்கிற்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் புகார்தாரருக்கும் வங்கி பரிவர்த்தனை நடந்துள்ளது என்றால் சரியல்ல. நான் புகார்தாரரிடம் கடன் பெற்றுள்ளேன் என்றாலும் அதற்காக காசோலை கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. மருத்துவ சான்றிதழக்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. நான் சட்டப்படி தொகை செலுத்த கடமைபட்டவர் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

S.PACKIARAJ B.Sc.,B.L.

Digitally signed by S.PACKIARAJ B.Sc.,B.L.
Date: 2026.06.08 11:49:50 +0530

Judicial Magistrate No.I
Dindigul.